ஜகன்நாதன்

December 21, 2014

# வாழ்க்கையை நம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான வழி முறைகள் (பாகம் 10)

**Point 46:**

**தன்னுடைய அதிகாரத்தை அடிக்கடி நிலைநிறுத்த வேண்டியிருக்காமல் தனக்குக்கீழ் இருப்பவர்கள் தானாகவே அவரவர் செய்ய வேண்டிய வேலைகளை செய்து கொண்டிருந்தால் அப்படிப்பட்டவருக்கு அவருடைய வேலை விஷயத்தில் வாழ்க்கை முழுவதும் கட்டுப்பட்டுள்ளதாக அர்த்தமாகும்.**

---

வாழ்க்கை செயல்களாலானது. காரியம் என்பது செயல்களின் தொகுப்பு. பெரிய காரியம் சிறிய காரியம் என்பவற்றை அளவு கருதியும் , முக்கியத்துவம் கருதியும் கூறுவோம். சிறுவர்கள் விளையாட்டு சிறு காரியம். எல க்க்ஷன் பெரிய காரியம். சிறுவர் விளையாட்டு மாநிலப் போட்டியானால் அளவால் அது பெரிய காரியம். திருமணம் அர்த்தத்தால் முக்கியம் என்பதால் பெரிய காரியம். காரியம் முழுமை. அதன் பகுதிகளான செயல்கள் பகுதி. **பகுதியின் பார்வையில் பகுதியே முழுமை.** முழுமை, பகுதியென்பவை முடிவானதொன்றில்லை. சந்தர்ப்பத்தைப் பொருத்தது. **முழுமை கட்டுப்பட்டவனுக்கு , பகுதிகள் கட்டுப்படும் என்ற கருத்தை தலைப்பாகத் தலைகீழே கூறப்பட்டுள்ளது.** இதன் உண்மையைப் பலவாறாக நாம் காண்கிறோம். 'அரசன் எவ்வழி, அவ்வழி குடிமகன்' என்பது ஓர் அம்சம். 'தாயைப் போல் பெண் நூலைப் போல் சீலை ' என்பவை அடுத்த அம்சங்கள். முடிவாகச் சொல்ல வேண்டுமானால் , **'கண்டமும் அகண்டமும் ஒன்றே , அவனன்றி ஓர் அணுவும் அசையாதே . கடவுள்களாலும் பிரம்மம் விலகினால் துரும்பையும் அசைக்க முடியாது' என்பவை பலவகையாக இதைக் கூறும்.** ஒருவர் பயன்படுத்திய பொருளில் அவர் பழக்கம், சுபாவம் தெரியும். ஒரு ஆசிரியர் மேஜையை விபரமாகக் கண்டால் அவர் பத்திரிகையைப் புரிந்து கொள்ளலாம் என்று மானேஜ்மெண்ட் நிபுணர்கள் கூறுவார்கள். ஒரு வாரம் முதலாளி ஊரில் இல்லாதபொழுது கம்பனி வேலைகள் அவரிருக்கும்பொழுது நடந்ததைப் போலவே நடக்கின்றன எனில் அவருக்கு வாழ்வு கட்டுப்பட்டது எனப் பொருள். பொதுவாக அவருக்குக் குடும்பம் கட்டுப்பட்டிருக்கும். அவர் தலைவராக உள்ள ஸ்தாபனங்களில் கட்டுப்பாடிருக்கும், அவர் பம்பாய் போய் வந்தபொழுது ரயிலில் விபத்து என்றால் அது அவர் பிரயாணத்தைப் பாதிக்காததாக இருக்கும். கட்டுப்பாடு மனத்திற்குரியது. வாழ்வு மனத்திற்குக் கட்டுப்பட்டது. அப்படிப்பட்டவர் வீட்டிற்கு முன் கீத்துப்பந்தலில் தீபாவளி வெடி விழுந்தால் , வெடிக்காமல் பொசுங்கிவிடும். கடமையுணர்வு,பொறுப்பு, நிதானம், பர்சனாலிட்டியின் திறன் வாழ்வில் வெளிப்படுவது சக்தி வாய்ந்தவை. நாட்டுப் வழக்கம் இதை இராசி எனக் கூறும். இந்த அம்ச ம் அளவுகடந்திருந்தால் அவர் கடையில் வாங்கிய பொருள் குறையுடையதானால், **அக்குறையே அந்த சரக்குக்கு நிறைவாகும். Post-It ஏற்பட்டது** அது போலவே. அன்பரின் பெயரை அன்னை Birthday Card ல் தவறுதலாக ஒரு r- க்கு பதிலாக இரண்டு r போட்டு எழுதினார். அன்பர் அ திலிருந்து தன் பெயரையே அன்னை எழுதியது போல் மாற்றிக் கொண்டார். மிளகு வியாபாரிக்கு இந்த ஞானம் இருந்தது என்பதை விளக்குவது பழைய

கதை. ஒரு வீட்டினுள் நுழைந்து ஹாலைப் பார்த்து விட்டு உள்ளே போய் சமையல் - கட்டைப் பார்த்தால் , சுத்தம், ஒழுங்கு, பொறுப்பு, இரண்டிடத்திலும் ஒன்று போலிருப்பதைக் காணலாம். 1930 இல் இராஜாஜி திருச்சிக்குப் பேசப் போனார். பேச்சு முடிந்தபின் காங்கிரஸ் ஆபீஸுக்கு வந்தார். அன்று விநியோகம் செய்த துண்டு பிரசுரத்தைக் காட்டி "யார் அதை எழுதினார்?" என்றார். ஆபீஸ் குமாஸ்தா கிருஷ்ண மூர்த்தியை அழைத்து அறிமுகப்படுத்தி அவர் எழுதியதாகக் கூறினார். அவரே **'சிவகாமியின் சபதம் , பொன்னியின் செல்வ ன்' எழுதிய கல்கி கிருஷ்ண மூர்த்தி**. சட்டங்கள் நேராக செயல்படும் , எதிராகச் செயல்படும் , பகுதியாகச் செயல்படும் , விசேஷ அம்சம் இருந்தால் குறிப்பாகச் செயல்படும். இந்த சட்டங்கள் குடும்பம், ஸ்தாபனம், கம்பனி, ஆபீஸ், கட்சி, ஊர், உலகத்திற்குப் பொது. சட்டத்தை சூட்சுமமாக நுணுக்கமாக அறிய முழுமையான அம்சத்தையும் , பகுதியான அம்சங்களையும் அறிய வேண்டும். **குறிப்பாக பகுதிகட்குள்ள தொடர்பு , பகுதிக்கும் முழுமைக்கும் உள்ள தொடர்பு இவற்றை அறிய வேண்டும்.** தொடர்பை இருவகையாக அறிவது நன்று. ஒரே சட்டம் பணம் முக்கியமான கடையிலும் , பாசம் முக்கியமான வீட்டிலும் , இலட்சியம் முக்கியமான அரசியல் கட்சியிலும் இடத்திற்கேற்றவாறு தன்னை மாற்றிச் செயல்படுவதுண்டு. படிக்குமிடத்தில் திறந்த புத்தகத்தை அப்படியே விட்டுப் போனவருடைய சமையலறையில், குளிக்குமிடத்தில் திறந்த பாட்டில் மூடப்படாமலிருக்கும். இரண்டும் ஒரே பழக்கம். 80 நாளில் உலகைச் சுற்றி வந்த Fogg என்பவர் குறித்த நேரத்தில் செயல்படுபவர். 6.01க்கு அவர் 6.00 மணிக்கு வருவதாகக் கூறினால் வர மாட்டார். நிமிஷம் தவறாமல் செயல்படுபவர். அவருக்கு காலமும் வாழ்வும் கட்டுப்படுகிறது. **அவர் தவறிய இடத்தில் வாழ்வு அவர் தவறுவதைத் தடுக்கிறது.** துப்பறிபவன் அவருடைய வேலையாளை குடிக்க வைத்து , கப்பலைத் தவறும்படி செய்தான். அவரால் தவறிய கப்பலைப் பிடிக்க முடிந்தது. தொலைந்து போன வேலையாள் தற்செயலாகக் கிடைத்தான். ரயில் பாலம் விழும் நிலையிலிருக்கிறது. **விழும் பாலம் இவர்கள் ரயிலை முன்கூட்டி அனுப்பி விட்டு பிறகு விழுகிறது. இந்தியர்கள் இவர் வேலைக்காரனைப் பிடித்துக் கொண்டு போய் விடுகிறார்கள். அவ னையும் அவரால் மீட்க முடிகிறது. லிவர் பூலில் இறங்கியவுடன் துப்பறிபவன் தவறாக அவரைக்** கைது செய்து நான்கு மணி நேரம் சிறைப்படுத்தினான். அதையும் மீறி போட்டியை வென்றார். வென்றபொழுது தான் 24 மணி முன்னதாக வந்ததை அறிந்தார். காலமும், வாழ்வும் கட்டுப்பாடுள்ளவர்க்குக் கட்டுப்படுகிறது.

**Point 47**

**சேவை சம்பந்தப்பட்ட வேலைகளை அகந்தையில்லாமல் செய்யும் பொழுது வாழ்க்கை முழுவதும் கட்டுப்படுகிறது. ஆனால் அகந்தை தன்னுடைய விருப்பு வெறுப்புகளோடு தலையிடும்பொழுது சேவை சம்பந்தமான வேலை கெட்டு வாழ்க்கை கட்டுப்பாட்டை மீறிப் போகிறது.**

---

முக்கியமாக அகந்தையை அழிக்க விரும்புகிறவர் சேவையை மேற்கொள்வார்கள். வீட்டில் தன் சொந்த நிர்வாகத்தில் அகந்தை வளரும். பிற இடங்களில் , பொது வாழ்வில் அகந்தைக்கு இடம் குறைவு. பொது வாழ்வில் சேவை பெரும் பகுதியானது. சேவை

பிறருக்கு செய்வதால் அகந்தை வளரும் வழியில்லை. **சேவையில் சிரம் தாழ்த்தி செயல்படும் நேரம் அதிகம். இளைஞர்கட்கும் , சிறுவர்கட்கும், உரிமையற்றவர்க்கும் பதில் சொல்ல வேண்டிய இடம் சேவா ஸ்தாபனம்.** பொது மக்கள் அபிப்பிராயம் என்பது விவரமற்றவர் கூறுவது. அது சரியாக இருப்பது பொது வாழ்வுக்கு அவசியம். எந்தத் தவறும் எவரும் செய்யாத பொழுது விபரம் தெரியாமல் , அறிவற்றவர், "தண்டவாளத்தாலும், தந்திக்கம்பிகளாலும் வெள்ளைக்காரன் இந்தியாவை கட்டி ஊருக்கு எடுத்துப் போகப் போகிறான்" என்றும் பேசுவர். சில சமயம் அர்த்தமற்ற பேச்சு , அர்த்தமற்றதாகும். இந்திரா காந்தி, மகாத்மா காந்தியின் பேத்தி என்று மக்கள் கருதி ஓட்டுப் போட்ட எலக்ஷன் உண்டு. காங்கிரஸ், காந்திஜி எளிமையை இலட்சியமாக்கினார். 1940இல் மக்கள் நேருவுக்கு துணிமணிகள் பாரிசில் சலவை செய்யப்படுகின்றன எனப் பேசினர். **அவருடைய வாழ்வுத்தரம் அதனால் "உயர்ந்து" அவர் பிரபலமானார்** . ஒருவர் சேவையை மேற்கொண்டால், குதர்க்கவாதி ulterior motive அவரது உள் நோக்கம் என்ன என்று கேட்பார். பொதுவாக இப்படிப் பேசுபவர்கள் சுய - மரியாதையின்றி கைகட்டி நிற்பவர்கள். சேவை ஸ்தாபனத்திலிருப்பவர்க்கு அதிகாரமில்லாததால் அடுத்தவர் அதிகாரமாக பேச இடம் கொடுக்கும். ராஜாஜி 1937-39இல் தமிழ்நாட்டு முதல்வ ரானவர். அன்று அப்பதவியை Premier பிரதமர் என்றார்கள். காந்தி ஜிக்கு வாரிசு. அகில இந்தியாவில் தமிழ் நாட்டின் பிரதிநிதி. பாக்கிஸ்தான் சம்பந்தமாக அவர் காந்தி ஜியுடன் கருத்து வேறுபட்டு காங்கிரஸிலிருந்து வெளிவந்து பிரசாரம் செய்தபொழுது சிதம்பரம் வந்தார். பெரிய கூட்டம் வந்தது. கூட்டத்திலிருந்து ஒரு டெய்லர் எழுந்து துண்டுப்பிரசுரத்தைக் காட்டி பொதுமக்கள் என அடியில் போட்டிருப்பதைக் குறித்து , **"எந்த பொதுமக்கள் உங்களை இங்கு வரவேற்கின்றனர்?" என்று கேட்டார்.** கேட்டவர் எளிய டெய்லர். கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் கோபப்பட்டு 'உட்கார்' என சத்தம் போட்டனர். ராஜாஜி டெய்லருக்கு பதில் கூறினார். "இங்கு வந்திருப்பவர்கள் எல்லாம் பொது மக்களில்லையா ?" என்றார். **சேவை அகந்தைக்கு இடம் தராது** . ஆசிரமத்தில் ஒரு சிறு கு ழந்தை அன்னைக்குக் கடிதம் எழுதி "அனைவரும் உங்களை கடவுள் என்கிறார்களே , அது உண்மையா ? மாடியிலிருந்து கொண்டு என்ன செய்கிறீர்கள்? எனக் கேட்டது. பதிலாக "நான் கடவுள் தான். நீயும் கடவுள். உலகில் அனைவரும் கடவுள். **கடவுளிட்ட பணியை செய்கிறேன்**" என்று பதிலெழுதினார். பிறருக்கு செய்யும் வேலை சேவை. அகந்தை அத்துறையில் அழிவதால், வாழ்வு முழுவதும் கட்டுப்படும். அதே சமயம் வாழ்வு அகந்தையின் வெளிப்பாட்டைக் கண்டால் வாளாக மாறிப் போர்த்தொடுக்கும். சேவையில் மாலை வரும் , கல்லடியும் விழும். இந்திராவுக்கு மூக்கில் கல் அடிபட்டு எலும்பு முறிந்தது. தெய்வ மாகக் கொண்டாடிய நேருவுக்குப் பூனாவில் கறுப்புக்கொடி காட்டினார். M.R.மசானி என்ற M.P. பார்லிமெண்டில் நேரு பேசிய பொழுது "உங்கள் அறிவில்லாத பேச்சு எனக்கு சிரிப்பு மூட்டுகிறது " என்றார். அகந்தை அடக்கமாக இருக்கும்பொழுதே பேச்சு குதர்க்கமாக வரும் , அகந்தை தலையெடுத்தால் பொது வாழ்வு மட்டம் தட்டும். AMA என்பது American Management Association. அமெரிக் காவில் தகுதிக்குப் பரிசுண்டு. Larry Apply என்பவர் வாழ்நாளைத் தொடங்கும்பொழுது 'தினமும் ஒன்றைக் கற்பேன் ' என்று முடிவு செய்தார். **அதே போல் செய்தார். AMA தலைவரானார்.** படுக்கப்போகும் பொழுது அன்று எதையும் கற்க முடியவில்லை என்றால் அகராதியிலிருந்து ஒரு புதுச்சொல் பயில்வார். அவர் தம் சர்வீஸ் முடிந்து பாராட்டு விழாவுக்குப் பதில் கூறும்பொழுது 'நான் என் வழியே மட்டும்

செயல்பட்டு AMA தலைவரானேன்' என்றார். இவருக்கு அடுத்தவராகத் தலைமை ஏற்றவர் "இது வரை உங்கள் வழிப்படி AMA நடந்தது. **இனி என் வழிப்படி AMA நடக்கும்"** என்றார். அகந்தையை உலகம் ஏற்காது. சேவை அனுமதிக்காது. உலகம் பூரண யோகத்தை அந்த அளவில் ஏற்றுக் கொண்டுள்ளது.

**Point 48**

**ஒரு உயர்ந்த நிலையில் வாழ்க்கையை நடத்த விரும்புகின்றவர் அவருடைய பர்சனாலிட்டியின் உயர்ந்த அம்சத்திற்கு ஏற்றபடி தன்னுடைய தாழ்ந்த அம்சங்களையும் மாற்ற வேண்டும். இதல் வெற்றி பெறுகின்றவர் வாழ்க்கையை தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பார். ஆனால் ஒப்புக்காக உயர்ந்த இலட்சிங்களை ஏற்றுக் கொண்டு உண்மையில் தன்னுடைய தாழ்ந்த அம்சங்களை பாராட்டிக் கொண்டிருப்பவரால் வாழ்க்கையை தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியாது.**

---

தமிழ்ப்புலவர் படிப்பில் சேர 8 வகுப்பு பாஸ் செய்திருக்க வேண்டும். புலவர் சம்பளம் 1940இல் 50 ரூபாய், திறமையுள்ள பலர் ஆங்கிலப் பட்டமில்லாமல் வாழ்வில் உயர முடியாமலிருக்கும் பொழுது SSLC, B.A., M.A. ஆங்கில அடிப்படையின்றி ஒருவர் எளிதில் பெற முடியாது. அது போ ன்ற ஒரு புலவர் தம் பர்சனாலிட்டியின் உயர்வைக் கண்டு , பட்டப்படிப்பை Ph.D. க்கு உயர்த்தினார் . கல்லூரியில் பேராசிரியரானார். தரிசன சமயம் புதுவையில் தமிழ் மகாநாட்டுக்கு வந்தவர் ஆசிரம பக்கம் வந்து ஓர் அன்பரை சந்தித்தார். பல்கலைக்கழக வைஸ்சான்ஸ்லரானார். தகுதி என்பது பெரியது. பர்சனாலிட்டி என்பதை தகுதிக்குரியதைப் பெற்றுத் தரும் முயற்சி. இதே துறையில் முறையாகப் Ph.D. பெற்று பல்கலைக்கழக பேராசிரியரானவர் கல்லூரி முதல்வரானார். இவர் அந்த நாள் பாஷன்படி தமிழை ஆங்கிலம் போல் பேசும் பண்புள்ளவர். வெள்ளைக்காரன் , Tanjore,Madura,Trenqubar என்பது போல் அண்ணாமலை நகரை ஆனமலை நகர் என்பான். இப்பேராசிரியர் தமிழ்ப் பேச்சு முழுவதும் ஆங்கில உச்சரிப்பால் பேசுவார். கல்லூரி முதல்வரான பொழுது தற்கொலை செய்து கொண்டார். வாழ்க்கை பெரிய சக்தி. ஒருவனை ஆதரிக்கும் , உயர்த்தும் தாழ்த்தும். சென்னைக்கு ஒரு காங்கிரஸ் தொண்டருடன் சென்ற வண்டிக்காரன் மகன் அவருடன் வந்து இறங்கினான். 1942 ஆகஸ்ட் 8ம் தேதி போலீஸ் தொண்டரை கைது செய்தபொழுது உடனிருந்த இவனையும் கைது செய்தது. பள்ளிக்கூடம் போகாதவன். ஜெயிலில் படிக்க பேச கற்றுக் கொண்டான். உடனிருந்த கைதி காமராஜ் கண்ணில் பட்டான். காங்கிரஸ் பிரசாரகரானான். MLC ஆகவுமானான். பல்கலைக்கழக ஆங்கில ஆசிரியர். உடனுறை ஆசிரியர்களை போல் படிப்பை உதாசீனம் செய்யாமல் விரும்பிப் படிப்பார். ஆங்கில இலக்கியத்தை அதன் விமர்சனத்தை ஊன்றிப் படிக்கும் திறமை நம் நாட்டு M.A. பட்டதாரிகட்கு அன்றில்லை . I class என்பது எந்த மாணவரும் பெறாதது. II class பெறவே முயல்வர். எளிதில் அதைப் பெற முடியாது. II class பெறாமல் கல்லூரி ஆசிரியராவது கடினம். மாணவனாக இருந்தபொழுதே அதிகம் படித்து பிரபலமாகப் பாஸ் செய்ய முயன்றவர், வெற்றி பெறவில்லை. பின்னால் பல்கலைக்கழக ஆசிரியரானபொழுது ஜூனியராக இருந்தும் படிப்பைப் பாராட்டினார். கலையுலகம் அவரைப் பாராட்டியது.

மாணவர் ஆசிரியர் பாராட்டெல்லாம் பிரமோஷன் பெற உதவாது. இவருடைய புரொபஸர் ஓய்வு பெற்ற பொழுது , இவருக்கு மேல் சீனியராக இருந்த இருவரையும் கடந்து இவரைப் புரொபசராக்கினார்கள். தகுதிக்கு உலகில் பலன் வருவது அபூர்வம். **பெற்ற தகுதி பலனை எதிர்பார்க்காமல், அகந்தையின்றி பெற்றால்,** வாழ்வு முன் வந்து அணைத்து ஆதரவு தரும். 1950இல் நாட்டில் ஏராளமான கல்லூரிகள் வந்த பொழுது இளைஞ ர்கள் பலர் பேராசிரியரானார்கள், முதல்வரானார்கள். அவர்கள் முன்னேறிய வரலாறு தலைப்பை விளக்கும். அப்பாவும் சித்தப்பாவும் வைஸ்சான்ஸ்லர்களானவர் கள். தான் அமெரிக்காவில் படித்து குடும்ப வியாபாரத்தை வெற்றிகரமாக நடத்தி வந்தார். அவருடைய படிப்பிற்கும் , அந்தஸ்திற்கும் முனிசிபல் சேர்மன் பதவி ஒத்து வராது. ஆசைப்பட்டார். ஓட்டிற்கு பணம் கொடுக்காத காலத்தில் 50ரூபாய் கொடுத்து ஒரு தொகுதியில் தோற்று அடுத்த தொகுதியில் வென்றார். மிகப் பெரிய செலவில் சேர்மனானார். குடும்பம் உயர்ந்தது. படிப்பு அமெரிக்காவில் பெற்றது. இரண்டு மூன்று ஜில்லாக்களில் அவர் போன்ற செல்வந்தரில்லை. **ஆனால் அவருக்கு எந்த இலட்சியமுமில்லாத எளிய மனிதர்.** சேர்மனானார். சீக்கிரம் பதவியை இழந்தார். பல வகைகளில் உயர்விருந்தாலும், நாம் நாடும் துறைக்குரிய திறமையோ, இலட்சியமோ இல்லாவிட்டால் அதை ஒப்புக்குப் பெற முடியாது. ஒப்புக்குப் பெற்றால் வாழ்வு ஆதரிக்காது. பதவி நீடிக்காது. தொழிலாளர் சங்கம் நிறுவ அந்த நாளில் முயன்றவர் 100 பேரில் இரண்டு அல்லது மூன்று பேரே வெற்றி கண்டவர். தொழிலாளர் சங்க ம் நிறுவுவதற்கு தொழிலாளியே எதிரி. அதன் வழி அகில இந்தியத் தலைமையை எட்டியவர் பலர். வாழ்க்கையை இழந்தவர் ஏராளம். **அந்தத் துறையிலும் தன் பர்சனாலிட்டிக்கு ஏற்ற தகுதிகளைப் பெற்றவர் பல லட்சங்களையும் “சம்பாதித்த”துண்டு.** நல்லவன் நல்ல முறையில் உயருவான். நல்ல முறையில் பணம் சம்பாதிக்க முடியாது. ஊழல் தவறில்லை என உலகம் நினைக்கும்பொழுது திறமையுள்ளவன் அளவுகடந்து சம்பாதிக்க சூழ்நிலை உதவும். எது சரி , எது தப்பு, என்பது பெரிய கேள்வி. வாழ்வு திறமை , தகுதி, வெற்றி, நஷ்டம், தோல்வி என்ற கருத்துக்களைக் கருதும் நேரம் இது போன்று வெற்றி பெற்றவர்கள் வாழ்வும் வரலாற்றில் பேசும்.

**Point 49**

**பகுதியை மட்டும் தெரிந்து கொள்ளாமல் முழுமையை தெரிந்து கொண்டிருப்பவருக்கு வாழ்க்கை சுலபமாகக் கட்டுப்படும்.**

---

ஆனந்தில் பால் பண்ணை 60 ஆண்டுகட்கு முன் நஷ்டமாக நடப்பதை நெடுநாளாக எதுவும் செய்ய முடியாத நிலையில் சு ப்ரமணியம் மத்திய மந்திரியாக இருந்தா ர். வர்கீஸ் குரியன் கேரளாவில் D.P.I. மகன். அவனுடைய மாமாவின் தகப்பனார் மத்திய நிதி மந்திரியாக இருந்தவர். குரியன் அமெரிக்காவில் இன்ஜீனியர் பட்டம் பெற்றவன். பெரிய குடும்பத்தைச் சாந்தவன். கெட்டிக்காரன் எனப் பெயர் வாங்கியவன். அவன் டெல்லியில் வேலையிலிருந்தான். **சுப்ரமணியம் அவனை அழைத்து "ஆனந்த் நஷ்டமாகிறது. நீ போய் அதை இலாபகரமாக்கு" என்றார்.** ஆனந்த் பெரிய பால் பண்ணை. அங்கு இல்லாததில்லை. ஆனால் இலாபம் வரவில்லை. நம் வழக்கில் கவனம் பத்தாது என்போம். வீடு கட்டடம் , மனிதர்கள் வாழுமிடம் , பொருள் உண்டு , பல நிகழ்ச்சிகள் அடிக்கடி நடக்கும். வீடு

குடும்பமாகாது, பணம், சாப்பாடு, துணிமணி, பர்னிச்சர் குடும்பத்திற்கு அவசியம். அவை குடும்பமாகா. பாசம் , பற்று, உறவு, பிரியம், பொறுப்பு, பண்பு, மரியாதை, கௌரவம் வீட்டைக் குடும்பமாக்கும், வீட்டிலுள்ளவை ஜடமானவை. மனிதர்களும் ஜடமாக இருக்கக் கூடியவர்கள். **ஜீவனளிப்பது குணம்.** ஜடமான பொருள்கள், ஏன் ஜடமான மனிதர்கள் பகுதி. ஜீவனுள்ள நோக்கம் உயிர் தருவது. ஜடமான வீட்டை ஜீவனுள்ள குடும்பமாக்குவது மனிதப் பண்பு. குரியன் வரும்வரை அவரவர் தம் கடமையை கடனே எனச் செய்தனர். குரியன் வந்தார். வேலை நடந்தால் மட்டும் போதாது. லாபம் வர வேண்டும். லாபம் வந்தால் மட்டும் போதாது. அனைவரும் சந்தோஷமாக இருக்க வேண்டும். அதுவும் போதாது. பிரபலம் வர வேண்டும். நாம் செய்யும் வேலை உபரியாகி நாடு முழுவதும் பரவ வேண்டும் என்ற நோக்கத்துடன் வேலை செய்தார். தொழிலாளிகள் உற்சாகமானார்கள். வேலையில் விரயம் தவிர்க்கப்பட்டது. பாலை பாலாக விற்பதற்குப் பதிலாக வெண்ணெயாக மாற்றி விற்க த் திட்டமிட்டார். '*அமுல்*' என்ற பேர் வந்தது. அமுல் வெண்ணெய், அமுல் பவுடர் வந்தது. அதற்குரிய பாக்டரி வந்தது , மாட்டை கவனித்தார். **கவனம் பெற்ற மாடுகள் அதிகப் பால் தந்தன** . ஆனந்த் பால் திட்டம் நாடு முழுவதும் பரவியது. குரியனுக்கு உலகப்புகழ் வந்தது. Food Prize பெற்றார். வங்காளம் , பஞ்சாப் , குஜராத், ஆந்திரா, ராஜஸ்தான் நாட்டின் பகுதிகள் **பாரத மாதா நாட்டின் ஆத்மா**. மாநிலங்கள் பகுதி. ஆத்மா முழுமையானது. கால் , கை, தலை, உடல், இதயம் நம் பகுதிகள். உயிர் இவற்றிற்கு முழுமை தருவது. 2000 ஆண்டுகட்கு முன் அரிஸ்டாட்டில் இவ்வுண்மையை உரைத்தார் — பகுதிகள் சேர்ந்தது முழுமையாகாது. பகுதிகள் சேர்ந்த தொகுப்புக்கு ஜீவனில்லை. அவை ஜடம். அதன் முழுமை சூட்சுமத்தில் அடுத்த உயர்ந்த கட்டத்தில் உள்ளது என்றார். ஒரு கடிகாரம் , கம்ப்யூட்டர், மோட்டார் போன்றவை மெ ஷின்கள். பல பகுதிகளாலானவை. ஒரு மெஷினைப் பிரித்து அதன் எல்லாப் பகுதிகளையும் ஓர் கூடையில் போட்டால் , அது மெஷினாகாது . **பகுதிகள் ஓர் சட்டப்படி இணைவது சூட்சும ஞானம்.** அதை நாம் செய்ய முடியாது. அந்த ஞானமுள்ள மெக்கானிக் தான் செய்ய முடியும். அத்துடன் கடிகாரம் ஓட பாட்டரி வேண்டும். இதற்கு முன் சாவி கொடுக்க வேண்டும். கம்ப்யூட்டர் வேலை செய்ய கரண்ட் வேண்டும். மோட்டார் ஓட எலக்ட்ரிசிட்டி வேண்டும். 1915இல் காந்திஜி இந்தியா வந்தார். காங்கிரஸில் சேர்ந்தார். ஜீவனற்ற ஸ்தாபனம் ஜீவன் பெற்றது. மகாத்மா மக்களுக்குக் கூறியது "தேச பக்தி வேண்டும் " என்றார். தேச பக்தி நாட்டிற்கு உயிர் கொடுத்த து. 300 வீடுள்ள செட்டியாருக்கு ஜவுளிக்கடையுண்டு. முனிசிபல் சேர்மனாக இருந்த குடும்பம். ஜவுளிக்கடையில் வியாபாரம் மந்தம். ஓரிரு நாள் போணியும் ஆவதில்லை. வாடகை வீட்டில் குடியிருந்த சொந்தக்கார குடும்பத்தில் சம்பந்தம் செய்து புது மாப்பிள்ளையை கடையில் உட்கார வைத்தார். வியாபாரம் வந்தது , வளர்ந்தது, பிரபலமாயிற்று, புது மாப்பிள்ளை கடைக்கு கவனம் செலுத்தினார். வருபவர்களை வரவேற்பார். அழகான இனிமையாக சொற்களால் விளக்கம் கூறுவார். கடை என்பது ஸ்தாபனம். பணம் அதற்கு முதல். சரக்கு விற்கப்படுகிறது. ஆட்கள் வேலைசெய்கிறார்கள். வாடிக்கைக்காரர்கள் வருகிறார்கள். இவையெல்லாம் பகுதிகள். பகுதிகட்கு சொந்தமான ஜீவனில்லை. பகுதிகள் சேர்ந்த முழுமைக்கு ஜீவனுண்டு. **ஜீவனுக்கு உறைவிடம் முதலாளி.** முதலாளியின் நோக்கம் இலாபமானால் இலாபத்திற்குரிய ஜீவனிருக்கும். முதலாளியின் நோக்கம் வியாபாரமானால், வியாபார சேவை அவர் மனத்தை ஆட்கொண்டால் , பிரிந்து கிடக்கும்

பகுதிகள் விரைந்து சேரும். உயிர் வரும். ஜீவன் பிறக்கும். ஆத்ம விழிப்பு ஏற்படும். **கடை கடைத்தெருவின் பகுதி. கடைத்தெருவின் அம்சம் வியாபாரம். வியாபாரம் ஊருக்கு சேவை செய்வது**. உயர்ந்த நோக்கமும் , பரந்த நோக்கமானால் , ஊருக்குச் செய்யும் சேவையை முதலாளி மனத்தில் கொண்டால் ஊர் விழித்து அவரைப் போற்றும். ஊர் முழுவதும் அவர் கடைக்கு வருவார்கள். கடை பெறுவது அதிக வியாபாரம். ஊர் பெறுவது சேவை. **சேவை எனும் இலட்சியம் ஸ்தாபனத்திற்கு ஜீவன் தந்து சேவை போய்ச் சேருமிடமெல்லாம் ஜீவனைத் தட்டி எழுப்பும்** . படித்தேன் , பட்டம் பெற்றேன் , வேலை கிடைக்கவில்லை என்றுண்டு. எனக்கு வேலை வேண்டும். நான் சம்பளம் பெற வேண்டும் என்றால் வேலை இருக்கும் காலங்களில் கிடைக்கும். என் சேவையைத் தொழிலுக்குத் தர வேண்டும் என்றவுடன் தொழில் குரல் கொடுத்து அழைக்கும் வேலை கிடைக்கும். திருமணமாகி கருத்தரித்தவுடன் கணவன் மனைவியைப் பிரிந்து விட்டான். பிறந்த குழந்தை தகப்பனாரைக் கண்டதேயில்லை. மாமா வீட்டில் வளர்ந்த குழந்தையுடன் மாமாவின் குழந்தை வளர்ந்தது. அக்குழந்தை 'அப்பா' என மாமாவை கூப்பிட்டால் இக்குழந்தையும் மாமாவை 'அப்பா' எனக் கூப்பிடுகிறது. **குழந்தை வளர உணவு , துணி போல கவனமும் , பாசமும் தேவை. பாசம் முழுமை சாப்பாடு பகுதி.** பாரத ரத்தினம் ஏற்பட்ட நாளில் பிரதமரை விட அதிகப் பிரப லமுள்ளவர்களுக்காக ஏற்பட்டது. முதலில் பெற்ற மூவரும் அப்படிப்பட்டவரே. நாட்டின் சேவையை நயமாகச் செய்தவர்கட்கு பாரத ரத்னம் கொடுக்கப்பட்டது. பிறகு பிரபலமான பிரதமர்கட்கும் கொடுத்தார்கள். சுப்ரமணியம் பிரதமராகவோ, ஜனாதிபதியாகவோ பதவி வகிக்கவில்லை. ஆனால் அவருக்குக் கொடுக்கப்பட்டது. ஒரு நாட்டில் பிரதமர் மட்டும் செய்யக்கூடிய சேவையை செய்தவர் அவர். 1947முதல் 1967 வரை பிரதமராலும் செய்ய முடியாத சேவையை பசுமைப் புரட்சி செய்தது. பெரிய குடும்பங்கள் சீரழிந்து போகும். சீரழியாவிட்டாலும் இருக்குமிடம் தெரியாமலிருக்கும். புது மருமகள் வந்தவுடன் குடும்பம் களைகட்டும் , நிமிர்ந்து நிற்கும் , எடுபடும், மருமகளை மகாலட்சுமி எனக் கொண்டாடுவர். இதை மகள் செய்வதுண்டு , மகன் செய்வதுண்டு, ஒரு வீட்டில் சமையல்காரனும் செய்தான். முழுமைக்குரியது ஜீவன் , பகுதிக்குரியது வேலையில் பங்கு. பூனா மகாராஷ்டிராவில் உண்டு. இந்தியாவில் வங்காளம் உணர்ச்சிக்குப் பேர் போனது போல் பஞ்சாப் வீரத்திற்கும் , உத்திர பிரதேஷ் தலைமைக்கும், தமிழ் நாடு மகாராஷ்டிரம் அறிவுக்கும் பேர்போன இடங்கள். கோகலே , திலகர் பூனாவுக்கு பெருமை தந்த தலைவர்கள். இந்தியாவில் Intellectual atmosphere கல்வியின் **களையுள்ள இடம் எனப் பெயர் வாங்கியது பூனா.** நேரு தம் மகளை பூனாவில் உள்ள பிரசித்தி பெற்ற பள்ளியில் படிக்க வைத்தார். பென்னட் குடும்பம் 25 ஆண்டு ஆர்ப்பாட்டமாக இருந்தது. அது குடும்பமாக இல்லை , கூட்டமாக இருந்தது. குடும்பம் கூட்டமானால் கூட்டத்திற்குரிய பழக்கங்கள் வர ஆரம்பிக்கும். குடும்பம் கட்டுப்பாட்டால் எழுந்தது. கட்டுப்பாடு கடமையை நிறைவேற்ற உதவும். அது குடும்பத்திற்கு கௌரவம் தரும். ஆர்ப்பாட்டம் சத்தம். மௌனம் அழகு. புற ஆர்ப்பாட்டம் சத்தம். **அகம் ஆர்ப்பாட்டம் செய்ய நினைத்தால் நல்லது கெட்டது வேறுபாடு தெரியாது.** நினைத்ததை நினைத்த மாத்திரம் செய் யத் தோன்றும். தோன்றினால் செய்வான். வெட்கப்பட வேண்டிய காரியங்கட்கு வெட்கமிருக்காது. குடும்பம் விரிசல் விடும். பிரைட்டனே வரன் பிடிக்குமிடம். 'என் ச கோதரிகளை என்னுடன் அனுப்பினால் நான் அவர்கட்கெல்லாம் மாப்பிள்ளை பிடித்துத் தருகிறேன் ' என்று வாய் பேசும். நிலைமை மீறியபிறகு பென்னட் விழித்துக்

கொண்டார். தான் பொறுப்பற்றவராக நடந்ததை அறிந்தார். பொறுப்பை உணர்ந்தார். வீடு விரிசல் விட்டது குடும்பமாக புனர்ஜென்மமெடுத்தது. ஓடிப் போனவள் வாழ்க்கை காப்பாற்றப்பட்டது. அடுத்த பெரிய காரியங்கள் அற்புதம் அதிசயம் ஆச்சர்யம் என்பது போல் நிகழ்ந்தன. பகவான் ஐரோப்பியரைப் புகழ்ந்து எழுதுகிறார். "நாம் சிந்திக்கும் திறனை இழந்து விட்டோம். ஐரோப்பாவில் எளிய கூலிக்காரனும் செயல்படுமுன் சிந்திப்பான். சிந்தனையின் பலனே இன்றைய ஐரோப்பிய நாகரீகம் " என்று தம்பி பரீனுக்கு எழுதியவர் "நமக்கு ஆத்மாவுண்டு, நாம் சக்தியை வழிபட்டால் **நம் சிந்தனை வீறுகொண்டெழுந்து விரைவாகப் பரவும்"** என்றும் எழுதினார். வேலை செய்யலாம். அது உணவு உடை தரும். சிந்தனையும் சக்தி வழிபாடும் நாட்டுக்கு ஜீவன் தரும். சக்தி முழுமை. கடமை பகுதி. கடமையை செய்பவன் கர்மத்திற்குட்பட்டு பிறந்து வளர்ந்து இறப்பான். **அவனால் நாட்டிற்கோ வீட்டிற்கோ தனக்கோ பெரிய சேவை செய்ய முடியாது.**

## Point 50

**வாழ்க்கை மனிதனை விடப் பெரியது. ஆனால் அன்னை வாழ்க்கையை விடப் பெரியவர். ஆகவே அன்னையை ஒருவர் வாழ்க்கையின் மையமாக வைக்கும்பொழுது அவரும் வாழ்க்கையை விடப் பெரியவராகிறார். அப்படிப்பட்டவர்க்கு வாழ்க்கை கட்டுப்பட்டே ஆக வேண்டும்.**

---

அன்னையை அன்பர்கள் வழிபடும் தெய்வமாக ஏற்றுள்ளார்கள். அன்னை கடவுள்களின் தாய் என அன்பர்கள் அறிந்தாலும் அது என்ன என்று நடைமுறையில் தெரிவதில்லை. இதுவரை புயலும் , பூகம்பமும் முன் அறிவிப்பின்றி எழும். இப்பொழுது சற்றுமுன் எச்சரிக்கை செய்ய முடிகிறது. அது போன்ற எச்சரிக்கையைக் கேட்ட அன்பர் அன்னை வாழ்வைவிடப் பெரியவர் என்று உணர்ந்தவரானால் , அவ்வுணர்வுடன் அவருக்குப் பிரார்த்தனை செய்தால் புயல் விலகும். அந்த அன்பர் அன்னை வாழ்வைவிடப் பெரியவர் என அறிந்தவர். குருக்ஷேத்திரம் சென்ற சேலத்துப் பாட்டி வழிதவறி வந்தவர்களை விட்டுப் பிரிந்து திகைத்து செய்வதறியாத போது முருகன் , பெருமாள், வினாயகருக்கு செய்த பிரார்த்தனை பலிக்காதபொழுது , "Mother என எங்கும் பேசுகிறார்களே , அந்த தெய்வமாவது என்னைக் காப்பாற்றாதா ?" என்றார். தமிழ்க்குரல் காதில் விழுந்தது. ஒரு புண்ணிய வான் அவரைப் புலம் விசாரித்து காசிக்கு அழைத்துப்போய் வந்தவருடன் சேர்த்தார். **அந்த பாட்டிக்குப் பதில் கொடுத்த அன்னை அம்சம் வாழ்வைப் போன்றது.** ஊர் முழுவதும் புது ஜூரம் virus fever வருகிறது. எவரும் தப்ப முடியவில்லை என்றால் அன்னையின் பெரிய அம்சத்தை அறிந்தவர்க்கு அது கட்டுப்படும். வாழ்வில் புதிய நேரம் எழுந்து அனைவரும் திகைக்கும்பொழுது நிகழ்ச்சிகளை எவரும் சந்திக்க முடியாது , எதிர்க்க முடியாது. அந்த நேரம் அன்னையின் பெரிய அம்சத்தை அறியும் நேரம். அறிந்தவர் அவரை தன் வாழ்வின் மையமாகக் கொள்ளலாம். அவருக்கு வாழ்க்கை கட்டுப்பட்டேயாகும். என் கொல்லையில் விழும் பூச்சு இலாபத்தை சாப்பிட்டு விடுகிறது. அனைவர்க்கும் வருவது எனக்கும் வருவது இயற்கை என நினைப்பவர் வாழ்வை ஏற்கிறார். அவர் எளியவர். உலகத்திற்கு வரலாம் ,

ஊருக்கு வரலாம், அனைவருக்கும் வரலாம், நான் அன்பன். அன்னையை வாழ்வைக் கடந்த சக்தியாகக் கருதுபவன். என் வாழ்வின் மையம் அன்னை , **வாழ்வை விடப் பெரிய அன்னை** என்பவருக்கு பூச் சு விழாது. அவரால் எவருக்கும் அந்த ஆண்டு பூச்சு விழாது. சைனாக்காரர்களைத் திரும்பிப்போகச் சொன்ன அன்னை வாழ்விற்குட்பட்டவரில்லை. க்யூபாவிலும், கொரியாவிலும் போரைத் தவிர்த்த சக்தி வாழ்வைக் கடந்த சக்தி. பொய்யை வாழ்வின் கருவியாகப் பயன்படுத்துபவரை மனம் மாறி மெய்யாக நடக்க வைக்கும் சக்தி சர்க்காருக்கோ, சட்டத்திற்கோயில்லை. வாழ்வு பார்த்துக்கொண்டேயிருக்கும். வாழ்வு அவ்விடங்களில் தானே செயல்படாது. அன்னை செயல்பட்டார். அற்புதம் நிகழ்த்தினார். பிள்ளை வீட்டார் பெண் வீட்டாரை அணுகுவது வாழ்விலில்லை. ஒரு பெண்ணை மணக்க வந்தவன் இரு பெண்களின் திருமணத்தை ஏற்பாடு செய்தது உலகம் அறியாதது. வாழ்வைக் கடந்த அன்னையை வாழ்வு மையமாக்க அன்பனின் இன்றைய வாழ்வு மையத்தில் பொய் , புனைசுருட்டு, ஏமாற்று இருக்கக்கூடாது. அவற்றால் வாழ்பவர் அம்மையத்திலிருக்கக் கூடாது. தலைவர் , அதிகாரி, பெற்றோர் அது போன்றவரானால் , அவர்கட்கு பாசத்தால் பணிந்தவருக்கு இந்த நிலை ஏற்படும். அவர்களை அம்மையத்திலிருந்து எடுத்து விட்டால் **அழைக்கும்முன் அன்னை தானே வந்து அந்த இடத்தை உரிமையுடன் ஏற்றுக் கொள்வார்.** மனிதன் நல்லவன் , அறிவாளியானாலும் பழக்கத்தாலும் , பாசத்தாலும் இருண்ட சக்திகட்கு தன்னைப் பணிய வைப்பதுண்டு. அது சரியில்லை. நம் பிரியம் என்பது நமக்கு முக்கியமானால் அதன் வழி மட்டமான இருண்ட சக்திகள் உள்ளே நுழையும்.

---

மூலம்: N.அசோகன்
விரிவாக்கம்: ஸ்ரீ கர்மயோகி
சொற்பொழிவாற்றியவர்: திரு.ஜெகன்நாதன்
சொற்பொழிவாற்றிய தேதி: 10.05.15